From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C. .No. 14 /2012

Deposition of witness for: PW - 15

| | | | |
|---|---|---|---|
| Name | : Mareeshwari | Father/Husband Name | Muthaiah |
| Caste | : | Calling | |
| Religion | : | Age | |
| Date | : 19.06.2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 06.2024.

**(சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.)**

முதல் விசாரணை: (அரசுதரப்பில்)

நான் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து விருப்ப ஒய்வு பெற்று தற்போது மேலூரில் வசிக்கிறேன். நான் கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது 25.06.2011ம் தேதி நிலைய அலுவலலில் இருந்தபோது மதுரை ராஜாஜி மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின்படி அங்கு சென்று சிகிச்சையிலிருந்த சேக் முகமது என்பவரிடம் விசாரணை செய்து அவர் கொடுத்த புகாரினை பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண் 152-2011 இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 427, 379(என்.பி), 506(2) மற்றும் தமிழ்நாடு பெண்களை துண்புறுத்தலை தடுக்கும் சட்டம் 4ன் கீழ் வழக்கு பதிவு செய்து அதன் அசலை புகாருடன் நீதிமன்றத்திற்கு அனுப்பு ஒரு நகலை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட அன்றைய தினமே பகல் ஒரு மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கனேசன், மற்றும் அழகு முன்னிலையில் பார்வைமகஜர், மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மேற்படி சாட்சிகளை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். மேலும் சாட்சிகள் சேக்முகமது, ராஜாமுகமது, ரகுமத்நிஷா, மதினாபேகம், சேக்முகமது, ஷாஜகான், சேட்டுமுகமது. பவுன்ரோஜா, ஜாஸ்மின்பீவி, ஜாகிர்உசேன், பகுருதீன் ஆகியோர்களை விசாரித்துவாக்குமூலம் பதிவு செய்தேன்.

அன்றையதினமே பகல் 01.30 மணிக்கு கருங்காலக்குடி பெட்ரோல் பங்க் அருகில் வைத்து காதர்மைதீன், சாகுல்ஹமீது, ராமச்சந்திரன், மாரியப்பன் ஆகியோர்களை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். மேல் விசாரணைக்காக கோப்பினை ஆய்வாளர் திரு. ராமகிருஷ்ணனிடம் ஒப்படைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ11 ஆகவும், பார்வை மகஜர் அசாஆ12 ஆகவும், மாதிரி வரைபடம் அசாஆ13 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

சம்பவ நாளன்று இரவு 09.00 மணிக்க சம்பவ இடம் ் சென்றீர்களா என்றால் இல்லை. வேறு போலீசார் அலுவலர்கள் யாரும் அன்றைய தினம் சம்பவ இடம் சென்றார்களா என்றால் ஞாபகம் ் இல்லை. கொட்டாம்பட்டி போலீசா ் சம்பவ நாளான்று இரவு 09.00 ் சாட்சிகள் சொல்லீயுள்ளார்கள் என்றால் நான் போகவில்லை. நீங்கள் சம்பவ நாளான்று இரவு 09.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சேக் முகமதிடம் வாக்குமூலம் பெற்றீர்கள் என்றால் சரியல்ல. மேற்படி வாக்குமூலத்தில் மதினாபேகம் மற்றும் ராஜாமுகமது சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி புகாரானது எதிரிகளுக்கு சாதகமாக இருந்ததால் அதை நீங்கள் மறைத்துள்ளிர்கள் என்றால் ் சரியல்ல. பின்னிட்டுதான ் நீங்கள ் அசா1னிடம் எழுத்துமூலம ் புகார் வாங்கினீர்கள் என்றால் புகார் பெற்றேன். சம்பவ நாளனறே உங்கள் காவல் நிலைய போலீசார் வந்துதான் காயம்பட்டவர்களை ஆம்புலன்ஸ்ல் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரியல்ல. அசா1 சேக் முகமது வீட்டிற்கும் அசா5 மதினா வீட்டிற்கு ் சுமார் 500 அடி இருக்குமா என்றால் இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தினை சுற்றியும் நான்கு புறங்களிலும் குடியிருப்பு வீடுகள் உள்ளதா என்றால் ஆம்

2) அங்கு குடியிருந்தவர்கள ் நீங்கள் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகள் யாரும் அரசு தரப்பு சாட்சிகளில் உருட்டுகட்டையால ் தாக்கியதாக புகாரிலோ, விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நீங்கள் சம்பவ இடம் சென்றபோது சைக்கிள் அல்லது வேறு வாகனம் இருந்ததா என்றால் இல்லை. சாட்சிகள் அயுப்கான், சாகுல்ஹமீது தனது மனைவி ரகுமத் நிஷாவை அடித்ததாக அசா1 சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அசா1 போலீசில் புகார் கொடுத்தால் பெட்ரோல் ஊத்தி கொன்றுவிடுவதாக உங்கள் விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அசா2 ராஜாமுகதை எதிரி அயுப்கான் அருவாளால ் வெட்டியதாக புகாரில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 5ம் எதிரி சாகுல் அசா2 ராஜமுகமதை

தாக்கியதாக உங்கள் விசாணையில் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. சம்பவத்திற்கு மூல காரணம் பொதுபாதை சம்மந்தமானது என்றால் இடப்பிரச்சனை சம்மந்தமானது. அசா1 பொதுபாதையில் 4 அடி ஆக்கிரமித்துள்ளார் என்றால் தெரியாது. மேற்படி பாதையை ஆக்கிரமித்தால் பொதுமக்கள் யூனியன் அலுவலகத்தில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்ககாததால் 22.06.2011ம் தேதி புகார் கொடுத்தார் என்றால் சரிதான்.

3) மேற்படி புகாருக்கும் பின்பும் நடவடிக்கை எடுக்ககாததல் பொதுமக்களின் அசா1 குடும்பத்திடம் போய் கேட்டு வாக்குவாதம் ஏற்பட்டு அதிகம் கூட்டம் ஆனதால் அசா1 வகையறாக்கள் அவர்கள் வீட்டிற்கு ஒடி வந்துவிட்டார்கள். அவ்வாறு ஒடி வரும்போதுதான் அசா1 வகையறாக்கு காயம் ஏற்பட்டது என்றும், அந்த காயத்தை பயன்படுத்தி எதிரிகள் தான் காவல் நிலையத்திலும், யூனியன் அலுவலகத்திலும் புகார் கொடுத்திருப்பார்கள் என்று சந்தேகப்பட்டு இந்த புகார் பொய்யாக கொடுக்கப்பட்டுள்ளது என்றும், நீங்களும் சரியாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை நீங்கள் பதிவு செய்ததால அதை பொய் ஆகிவிடக் கூடாது என்பதற்காக நீங்கள் இவ்வழக்கில் விசாரணையை மேற்கொண்டு ஆவணங்கள் தயாா˙ செய்துள்ளீா்கள˙ என்றால˙ சரியல்ல. எதிரிக்கு இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.